# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C)

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. **SC.No.77/2023**
Prosecution: **PW** -10

**Deposition of the witness of LW-** 6

| | | | |
|---|---|---|---|
| **Name** | சரவணன் | **District** | இராணிப்பேட்டை |
| **Father's** Name | வெங்கடேஷன் | **Calling** | ரியல் எஸ்டேட் |
| **Age** | 53 | **Religion** | |
| **Village/Town** | ஆற்காடு | **Caste** | |
| **Taluk** | ஆற்காடு | **Aadhar Card No.** | 8474 3604 3481 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of July 2026.

1ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3, 5 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி சிறை காவலில் இருந்து பிடி ஆணை மூலம் ஆஜர் படுத்தப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

1. நான் எண்.29, போலீஸ் லைன் தெரு, ஆற்காட்டில் வசித்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் வழக்கு சம்பவத்தின்போது கத்தியவாடி கிராமத்தில் உள்ள பைரவர் கோவிலில் பூசாரியாக வேலை செய்து வந்தேன். சம்பவம் சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பு நடந்தது.

2. நான் கோவிலில் பூஜை செய்துகொண்டிருந்தபோது கோவிலுக்கு வந்த நபர்கள் கோவிலுக்கு வெளியே கூட்டமாக இருப்பதாக சொன்னார்கள். அங்கு சென்றபோது சுமார் 10, 15 நபர்கள் இருந்தார்கள்.

அங்கு ஒரு பையனை பிடித்து உட்காரவைத்திருந்தார்கள். அந்த பையனின் நகை மற்றும் பர்ஸ் ஆகியவற்றை எடுத்துவிட்டதால் அவனை உட்காரவைத்திருந்ததாக சொன்னார்கள்.

3. அதன் பிறகு போலீசார் அங்கு வந்து அந்த பையனை அழைத்து சென்றுவிட்டார்கள். பின்னர், போலீசார் கோவிலுக்கு வந்து இந்த விவரங்களை சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்காததால், அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார். சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. காவல்துறையினர் விசாரணையின் போது 30.01.2018ம் தேதி பகல் 11 மணிக்கு நான் பைரவர் கிரி கோவிலில் கூச்சல் சத்தம் கேட்டு சென்று பார்த்தேனா என்றால் சரியல்ல. நானும், அங்கிருந்த பொது மக்களும் சென்று பார்த்தபோது பைரவர் கோவில் அருகே 2 ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தார்கள் என்றும் அவர்களை விசாரித்தபோது அவர்கள் 4 பேரும் தங்களை 5 நபர்கள் மிரட்டியதாகவும், அதில் கருப்பு கலர் பல்சர் வண்டியை ஓட்டி வந்த ஒரு நபர் எங்களை வழி மடக்கி கத்தியை காட்டி மிரட்டி காதில் போட்டிருந்த தோடை கழற்ற சொல்லி பிடிங்கிகொண்டு சென்றதாக என்னிடம் கூறினார்கள் என்றால் சரியல்ல. இந்த சம்பவம் பற்றி நான் கேள்விபட்டதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

**இல்லை.**

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-A.Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.